ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

29.05.2025

1. ஞானத் தலைவனே முருகா
ஞானிகள் படை கொண்ட குமரா
ஞானதேசிகன் என்னை அவதாரமாக்கி
ஞான வழிகாட்டிய சுப்பிரமணியா

2. அய்யனே உன் கருணையாலே
அரங்கனும் சரவண சோதியாகி
மெய்ஞான சீடர் பெருமக்களை
மண்ணுலகில் உருவாக்க அருளிட

3. அருளிட வரம் தரும் வேலவா
அப்பனே அரங்கனும் வரம்தனை
அருட்சுவடி வழி குருவார ஆசியாக
அறிவிப்பேன் விசுவாவசு ஆண்டு விடை திங்களில்

4. திங்களில் சூலவாம் குருவார அருளாசி
தொண்டர் படைகள் மகிழ உரைப்பேன்
ஓங்கார ஞானபலம் வேண்டுமா
ஓங்கார சூட்சுமம் அறிய வேண்டுமா

5. வேண்டியே பிரணவக் குடிலுக்கு
விடாது தொடர்ந்து வந்து
தொண்டாற்றி அருளமுது உண்டு
தேசிகா உன் கொள்கை ஏற்று

6. ஏற்றுமே தரும நெறி வளர்ப்பேன்
ஏழ்மை பசிப்பிணி இல்லா
ஆற்றல்மிக்க தருமலோகமதை
அரங்கா உன் ஆசிபட படைப்பேன்

7. படைப்பேனென உறுதி கொண்டு
பண்புடனே சீடர் பெருமக்களாய்
தடையின்றி அரங்கன் எந்தன்
தருமம்தனை காத்து வருக

8. வருகவே அரங்கனென் ஆசியுடன்
வடிவேலனார் ஆசியும் கிட்டி
மறுமை கடக்கும் மகத்துவமும்
மண்ணுலகில் தேறி நிற்பர்

9. நிற்கவே அன்னதானம் எனும்
நிலைத்தன்மை தரும் தயவை
அற்புதமாய் அரங்கன் யானும்
அன்பர்களிடை சேவையாக்கி

10. ஆக்கியே அதன்வழியே ஞானமருள
அப்பனே அன்னமிட்டு வா
தேக்கமின்றி உன் தேவைகளை
தேசிகனே நிறைவேற்றி காத்து

11. காத்து நீ கடைத்தேறவே
கடைநாளும் உன்னுடனிருப்பேன்
சத்திய தரும ஞான சான்றோர்களாகி
சகலரும் ஞானிகள் ஆவரப்பா

அரங்கமகான் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி